# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **08 ஜூலை 2018** | **பொதுக்காலம் 14ம் ஞாயிறு** | **இரண்டாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு

அன்பு இறைமக்களே! ஆண்டின் பொதுக்காலம் 14ம் ஞாயிறின் நற்செய்தி வாசகத்தில், இயேசு தம் சொந்த ஊருக்கு வந்து, தொழுகைக் கூடத்தில் கற்பித்த போது, அவரது ஊரினர் வியப்பில் ஆழ்ந்தனர். அவருடைய பேச்சில் ஞானம் இருந்தது என்பதையும், அவரது செயல்களில் ஆற்றல் இருந்ததையும் அவர்கள் உணர்ந்தார்கள். ஆனாலும், 'அவரை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயங்கினார்கள்' காரணம் என்ன?

- அவர் ஒரு தச்சர். எளிய தொழிலைச் செய்தவர்.
- மறைநூல் அறிஞரோ, பரிசேயரோ அல்லர். சமயப் பின்புலம் இல்லாதவர்.
- அவர் மரியாவின் மகன். ஓர் ஏழைப் பெண்ணின் மகன். அவரும் ஏழை. பண பலம் இல்லாதவர்.
- அவரது சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் தெரிந்தவர்கள்.
- எளிய குடும்பப் பின்னணி. ஆள் பலம் இல்லாதவர்.
- எல்லாருக்கும் நன்கு அறிமுகமான உள்ளூர்க்காரர்.
- அவர்களது முற்சார்பு எண்ணத்தால் அவரது போதனை எடுபடவில்லை.

எனவே, இயேசு தமது சொந்த ஊரில் ஓர் இறைவாக்கினராக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது இறைவாக்கினர்கள் அனைவருக்கும் நேரும் கதியே என்பதை இயேசுவே 'சொந்த ஊரிலும், சுற்றத்திலும், தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப்பெறுவர்' எனச் சொல்லி அறிவிக்கின்றார். இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசேக்கியேலுக்கும் இதே கதி நேர்ந்தது என்பதைப் பற்றி வாசிக்கின்றோம். எனவே யாவே இறைவன் எசேக்கியேலிடம் 'கலக வீட்டாராகிய அவர்கள் செவிசாய்த்தாலும், செவி சாய்க்காவிட்டாலும் தங்களிடையே ஓர் இறைவாக்கினர் வந்துள்ளார் என்பதை அறிந்துகொள்ளட்டும்' என்கிறார்.

ஆம், எசேக்கியேல் போல, ஆண்டவர் இயேசுவை போல, ஓர் இறைவாக்கினர் நமது வீட்டிலே, நமது ஊரிலே, நமது பங்கிலே, நமது பணியிடத்திலே இருக்கலாம். சாதி, ஊர், ஏழ்மை, எளிய பணி, குறைந்த படிப்பு, பெண், வயதுக் குறைவு... எனப் பல காரணங்களை முன்நிறுத்தி அவர்களை இறைவாக்கினராக, உண்மையை அறிவிப்பவர்களாக, மனச்சான்றின் குரலாக, இறைநீதியைப் பகர்பவராக நாம் ஏற்க மறுக்கலாம், பார்க்கத் தவறலாம்.

இன்றைய வாசகங்கள் நம் கண்களைத் திறக்கட்டும். நமது முற்சார்பு எண்ணங்களை அகற்றிவிட்டு, நம்மிடையே நிற்கும் இறைவாக்கினரை அறிந்து கொள்வோம், அவர்கள் தரும் செய்தியை ஏற்றுக்கொள்வோம். நாம் பார்க்கும் பார்வைக் குறைவை நீக்கி, புதுப் பார்வை தந்தருளவும், நம் மத்தியிலே நிற்கும் இறைவாக்கினரை நாம் கண்டு கொள்ளவும் வரம் வேண்டுவோம். வாழ்த்துக்கள். ஆசீர்.

## புனித வின்சென்ட் தே பவுல் காணிக்கை

கடந்த ஞாயிறு **01-07-2018** அன்று எடுக்கப்பட்ட இரண்டாம் காணிக்கையில் கிடைத்த மொத்தத் தொகை S$4064.00.
வசதியற்றோருக்கு வழங்கப்பட்ட தொகை S$7410.00.
தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.



## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு



**14-07-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**
இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை கடவுளிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம்.



## இடைவிடா சகாய அன்னை நவநாள்



சனிக்கிழமைகளில் **இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும்.
அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.



## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு

**15-07-2018, ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை (பல்நோக்குச் சமூகக் கூடம்)**



முன்பதிவுக் கட்டணம் **$30** செலுத்தி, முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு, கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.



**தொடர்பு: திரு. ரெக்ஸ் (9822-6171)**

## ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 15-07-2018, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.

வாங்க... நம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்த நீங்களும் ஒரு கை கொடுக்கலாமே!

## வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை ஆண்டுப் பெருவிழா 2018

ஆண்டுதோறும் நமது தூய லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆண்டுப் பெருவிழா இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெறவுள்ளது. **08-07-2018, ஞாயிறு முதல்,** ஒன்பது வார நவநாளும், **09-09-2018, ஞாயிறு அன்று மாலை 6 மணிக்குப் பெருவிழாத் திருப்பலியும்,** அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவத் தேர்பவனியும் நடைபெறும்.

அனைவரும் வருக! வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆசீர் பெறுக!

**இன்றைய நவநாளைச் சிறப்பிப்போர்: நட்சத்திர அன்னை ஆலயத் தமிழ் குழு, யீசூன்.**

**அடுத்த வார நவநாளைச் சிறப்பிப்போர்: கிறிஸ்து அரசர் ஆலயத் தமிழ் குழு, அங் மோ கியோ.**

**திருவிழா சிறக்கத் தாராள உள்ளத்தோடு நன்கொடை தந்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | சா | ம் | லு | யி | டி | க | க் | ரு | நெ |
| ய | பொ | ரு | த் | த | ன் | க | ள | தீ | தை |
| ப் | ம் | லு | லி | ர | ட | இ | ம் | கா | உ |
| பி | லு | ப் | பை | ட | யோ | ன் | ர் | ட் | மீ |
| ல் | யி | கை | சு | பே | த | ன | தா | மி | ர் |
| தி | சி | கு | க் | ள் | கி | லி | நி | த் | ந |
| த் | ச் | வே | க | க் | மா | லு | ம் | ய | சா |
| ஏ | ழ் | ண் | வா | ர | யா | ம் | ளி | டி | பி |
| ய | க | றை | ல் | யி | பை | ச | ம | க | க் |
| வா | இ | மோ | ர் | கா | க | ற் | பி | த் | து |

1. அதைக் கேட்ட பலர் __________ ஆழ்ந்தனர்.
2. அவர் சுற்றிலும் உள்ள ஊர்களுக்குச் சென்று __________ வந்தார்.
3. தங்களிடையே ஓர் __________ வந்துள்ளார் என்பதை அறிந்து கொள்ளட்டும்.
4. ஆண்டவர் என்னோடு __________ ஆவி என்னுள் புகுந்து என்னை எழச் செய்தது.
5. ஆண்டவரே! நீர் எமக்கு இரங்கும்வரை எம் __________ உம்மையே நோக்கியிருக்கும்.
6. என்னைக் குத்திக் கொடுமைப்படுத்தச் __________ அனுப்பிய தூதனைப்போல் இருக்கிறது.
7. __________, __________, __________, __________, கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | எசேக்கியேல் 2 : 2 – 5 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 123 : 1, 2, 3, 4 |
| **பதிலுரை:** | ஆண்டவரே, எமக்கு இரங்கும் வரை எம் கண்கள் உம்மையே நோக்கியிருக்கும். |
| **இரண்டாம் வாசகம்:** | 2 கொரிந்தியர் 12 : 7 – 10 |
| **நற்செய்தி வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவருடைய ஆவி என் மேல் உள்ளது. ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்க என்னை அனுப்பியுள்ளார். அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | மாற்கு 6 : 1 – 6 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) : | மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.